முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

**அ.வ.எண். 83/2023**

நாள். 20.02.2026 பி.வா.சா.1 – திரு.லூர்துநாதன்

த/பெ - திரு. ஞானவாசகம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) தண்டையார் குளம் கிராமத்தில் உங்களுக்கு 1 ஏக்கர் 27 செண்டு இடம் உள்ளது என்றால் சரி தான். நீங்கள் வாங்கும் போது காலி இடமாக இருந்தது என்றால் சரி தான். 2017ம் வருடம் நீங்கள் வாதிக்கு கோழிப் பண்ணை அமைப்பதற்காக குத்தகைக்கு விட்டிருந்தீர்கள் என்றால் சரி தான். நீங்களும், வாதியும் சேர்ந்து ஒரு குத்தகை ஒப்பந்தம் எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரி தான். மொத்தம் 3 குத்தகை ஆவணங்கள் நாங்கள் பிறப்பித்துக் கொண்டோம்.

2) நாங்கள் 2021ம் ஆண்டு ஜூலை மாதம் கடைசியாக குத்தகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம், மாத குத்தகையாக ரூ.7500/- வாதியிடம் பெற்றுக் கொண்டீர்கள் என்றால் சரி தான். வழக்கு தாக்கல் செய்யும் வரை வாதி வாடகை கொடுத்து வந்தார் என்றால் சரி தான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் கொரோனா தொற்று கால கட்டத்தில் வாதியானவர் உங்களுக்கு சரியாக வாடகை கொடுத்து வந்தார் என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.20 01:07:16 +0530

3) கோழப்பண்ணையில் வாதி மாட்டையும் கட்டி வந்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டு வந்தது என்றால் சரி தான். மாட்டை கட்டி வந்ததால் நீங்கள் கோழிப்பண்ணையை காலி செய்ய சொன்னீர்கள் என்றால் சரி தான். கோழிப்பண்ணை வைத்ததற்கான செட்டுகளையும், மாடு கட்டுவதற்கான செட்டுகளையும் வாதி அமைத்தார் என்றால் சரியல்ல, நான் தான் அமைத்தேன். வாதியும் அப்போது வேலை பார்த்தார். மாட்டு கொட்டைகைய அவர் தான் அமைத்தார் என்றால் சரியல்ல, அவர் மாடுகளை கட்டி வைத்திருந்தார், மாடுகளை கட்டக் கூடாது என்ற நான் கூறினேன்.

4) வாடகை பணம் சம்மந்தமாகவும், இடத்தை காலி செய்வது சம்மந்தமாகவும் 2023 ம் வருடம் பணகுடி காவல் நிலையத்திலும், வள்ளியூர் துணை காவல் துறை கண்காணிப்பாளரிடமும் புகார் கொடுத்து அது விசாரிக்கப்பட்டது என்றும் புகார் விசாரணையில் வாதி வாடகையை மாத மாதம் தர வேண்டும் என்று பேசி முடிக்கப்பட்டது என்றால் சரி தான். வாடகை கொடுக்க வேண்டும் என்று தான் முடிவு செய்யப்பட்டது, காலி செய்ய வேண்டும் என்று பேசி முடிக்கப்படவில்லை என்றால் சரி தான்.

5) வாதி அவருடைய சொந்த செலவில் கோழி பண்ணையை உங்களுடைய அனுமதியின் பேரில் அமைத்தார் என்றும் கோழி குஞ்சுகள் இருக்கும் போது திடீரென காலி செய்யுமாறு வாதியை காலி செய்ய சொல்லியதால் அவர் காலி செய்ய

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.20 01:07:24 +0530

மறுத்தார் என்றால் சரியல்ல. தற்போதும் வாதி தான் அந்த இடத்தை மேற்பார்வை செய்து வருகிறார் என்றால் அது தற்போது காலி இடமாக உள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளதால் நானும் தாவா சொத்தில் தற்போது எதுவும் செய்யவில்லை, காலி இடமாகத்தான் உள்ளது.

6) நீங்கள் எதிர் கோரிக்கையில் சொல்லி உள்ளது போல வாதி எந்த விதமான வாடகை பாக்கியையும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் அட்வான் தொகை ரூ-30,000/-த்தை இதுவரை வாதியிடம் கொடுக்கவில்லை என்றால் சரி தான். கோழிப்பண்ணைக்குரிய உபகரணங்கள், சாமான்கள் அனைத்தும் தபசில் சொத்தில் தான் உள்ளது என்றால் சரி தான். நீங்கள் எதிர் கோரிக்கையில் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7) வாதி இடத்தை காலி செய்து தர கேட்டு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தும் பரிகாரம் நீங்கள் கோரவில்லை என்றால் சரியல்ல. இன்று வரை வாதி உங்கள் அனுமதியின் பேரில் சட்டப்படியான குத்தகையில் இருந்து வருகிறார் என்றால் சரி தான். குத்தகை காலம் முடிந்து விட்டது, ஆனால் தற்போது வரை குத்தகையில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் கோழிப்பண்ணையை ஒழுங்காக நடத்த விடாததால் வாதிக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.20 01:07:32 +0530

8) வாதி இன்று வரை உங்களுக்கு வாடகையை கொடுத்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை:

1) வாதி உங்களுக்கு வாடகையை உங்களது வங்கி கணக்கில் தான் செலுத்துவார் என்றால் சரி தான். நேரில் கொடுத்தது கிடையாது என்றால் சரி தான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.02.20 01:07:39 +0530